பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 08 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1) நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கு தொகுதி மறுவரையறை அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

2) தமிழகத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

3) மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூலம் இந்தியா ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4) மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கு தொகுதி மறுவரையறை செய்வது அவசியம் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 2029-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு முன்பாகவே மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொகுதி மறுவரையறைக்கு பின்னர் மகளிர் இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும் என்று திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

இதில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் திமுக, அஇஅதிமுக, பாமக, தேமுதிக, மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட கட்சிகள் கலந்துகொள்ளவில்லை.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூலம் இந்தியா ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

கோவையில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான சுதேசி கண்காட்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், மத்திய அரசின் தொழில் முன்னேற்றத் திட்டங்கள் மூலம், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் - 50 Sec.)***

<<<<<<>>>>>>

புதுச்சேரியில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விமானம் மூலம் இன்று மாலை சென்னை வந்தடைந்தார்.

பின்னர், ஹெலிகாப்டர் மூலம் திருவண்ணாமலை சென்ற அவர், அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

அவர் வருகையையொட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

<<<<<<>>>>>>

சட்ட சேவைகள் மையத்தில் இடம்பெற்றுள்ள தன்னார்வலர்கள் நீதிமன்றங்களை நாடும் மக்களுக்கு கண்ணியமான முறையில் தீர்வு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் சட்டம் மற்றும் நீதி தொடர்பான மேற்கு மண்டல கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சம்பந்தப்பட்ட மாநிலங்களின் மொழிகளில் அவர்களின் குறைகளை கேட்டு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு சூரியகாந்த் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு மோகன் யாதவ், நாட்டின் நீதித்துறையில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 45 Sec. )***

<<<<<<>>>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலாத்துறை சார்பில், வெண்ணமடை குளத்தில் படகு சவாரி சேவை தொடங்கியுள்ளது.

இதனால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செந்தில் — 33 Sec.)***

<<<<<<>>>>>>

**Rapid Blitez Chess** சாம்பியன் பட்டத்தை வென்ற இந்தியாவின் கிராண்ட்மாஸ்டர் பிரஞ்யானந்தாவிற்கு, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டிடத்தை வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் திரு தென்னரசு இன்று திறந்துவைத்தார்.

-----------------------

அரக்கோணம் ரயில் நிலையத்தில் நடைபெற்றுவரும் அம்ரித் பாரத் உள்ளிட்ட மேம்பாட்டுப்பணிகளை தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு சுப்பாராவ் இன்று ஆய்வு செய்தார்.

----------------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட ஆயிரம் பேருக்கு ஆட்சியர் திரு தினேஷ்குமார் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

----------------

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வரும் 15-ம்தேதி சுதந்திர தினத்தன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி ஷரண்யா அறி தெரிவித்துள்ளார்.

------------------

முல்லைப்பெரியாறு அணையிலிருந்து முதல்போக பாசனத்திற்காக தண்ணீரை தேனி மாவட்ட ஆட்சியர் திரு.வைத்திநாதன் இன்று திறந்து வைத்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் இணையவழி குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-------------------

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

-----------------

திருப்பூர் மாநகர காவல்துறை சார்பில், போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று நடைபெற்றது.

--------------

தென்மேற்கு பருவமழை உதகையில் குறைந்துள்ள நிலையில், குடிநீர் ஆதாரமான **Parsons Valley** அணையின் நீர்மட்டம் குறைந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

---------------

சென்னை மாநகராட்சி மாதவரம் மண்டலத்தில் **22** கோடியே **88** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

------------

மாநிலம் முழுவதும் வரும் **10** மற்றும் **17-**ஆம் தேதிகளில் குடற்புழு தொற்று தடுப்பு மாத்திரை வழங்கும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா **3-1** என்ற கணக்கில் ஸ்பெயினை வென்றது.

-------------

இலங்கை **Eleven** அணிக்கு எதிரான மூன்று நாள் பயிற்சி கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் **6** விக்கெட் இழப்பிற்கு **357** ரன் எடுத்துள்ளது.

**கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியாவின் Devdutt Padikkal அதிரடியாக ஆடி 142 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.**

**<<<<<<END>>>>>>**